News Paper Clippings appeared about Pondicherry University

DINAKARAN DATED 13.04.2025

# ஹெலிபேட் மைதானத்தில் தூய்மை பணி

புதுச்சேரி, ஏப். 13: புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள், புதிய கல்வி கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தின் கீழ் "சமுதாய ஈடுபாடு" திட்டத்தின் ஒரு பகுதியாக, நேற்று முன்தினம் உழவர்கரை நகராட்சியுடன் இணைந்து ஹெலிபேட் மைதானத்தை சுத்தம் செய்தனர்.

இதில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ், சுகாதார அதிகாரி டாக்டர் ராஜா, உதவி பொறியாளர் ஜெயசங்கர் ஆகியோர் பணியைத் தொடங்கி வைத்தனர். மாணவர்கள் மைதானத்தைச் சுற்றியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர்.

சுத்தப்படுத்துதல் பணிகளுடன், மக்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வையும் மாணவர்கள் ஏற்படுத்தினர்.

இதில் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், பேராசிரியர்களான சுஜரிதா, இந்துமதி, வசந்தா கோகிலம், பாண்டு மற்றும் நிர்வாக பணியாளர் செல்வம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இப்பணியில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் தூய்மை பணி நடந்தது.

DINAMALAR DATED 13.04.2025

# லாஸ்பேட்டை மைதானத்தில் துப்புரவு பணி
# சமுதாய கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு

**புதுச்சேரி, ஏப். 13–**

லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்தில் தீவிர துப்புரவு பணி நடந்தது.

பெஞ்சல் புயலின் போது ஏராளமான மரங்கள் லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானம் மற்றும் அதனை சுற்றிலுள்ள பகுதிகளில் முறிந்து விழுந்த நிலையில், அப்பகுதியில் மீண்டும் பசுமையை ஏற்படுத்த தினமலர் நாளிதழ் முயற்சி எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, ஹெலிபேடு மைதானத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மரக்கன்று நடும் திட்டத்தையொட்டி ஹெலிபேடு மைதானம் முழுதும் தீவிர துப்புரவு பணியும் மேற்கொள்ளப்பட்டது.



■ சமுதாயக் கல்லூரி மாணவர்கள் மற்றும் உழவர்கரை நகராட்சி ஊழியர்கள் இணைந்து லாஸ்பேட்டை ஸ்கேட்டிங் மைதானத்தைச் சுற்றி குவிந்துள்ள குப்பைகளை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து பல்வேறு கல்லூரி நிறுவனங்கள் கரம் கோர்த்து தூய்மை பணியில் ஹெலிபேடு மைதானத்தில் தீவிர துப்புரவு பணியில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில், தினமலர் நாளிதழ், புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி, உழவர்கரை நகராட்சி சார்பில், நேற்று தீவிர துப்புரவு பணி நடந்தது.

பல்வேறு குழுக்களாக பிரிந்த சமுதாய கல்லூரி உடற்கல்வித் துறை மாணவர்கள் ஸ்கேட்டிங் மைதானத்தை சுற்றிலும் சிதறி கிடந்த குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்தினர்.

கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, தீவிர துப்புரவு முகாமை துவக்கி வைத்தார்.

அவர் பேசுகையில், 'இவ்வளவு பெரிய மைதானம் புதுச்சேரியில் இருப்பது நமக்கு பெருமை. இதனை தூய்மையாக வைத்துக் கொள்ளுவது இம்மைதானத்தை பயன்படுத்திக் கொள்ளும் அனைவரது கடமை. இம்மைதானத்தில் பசுமையை மீட்க தினமலர் சார்பில், மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பது பாராட்டுக்குரியது.

இந்த முயற்சியில் அனைவரும் கரம் கோர்த்து, லாஸ்பேட்டை மைதானத்தில் பசுமை சூழலை மீட்டெடுக்க வேண்டும். சமூக பொறுப்புடனும் குப்பைகளை குப்பை தொட்டியில் போட வேண்டும்' என்றார்.

நிகழ்ச்சியில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ் அறிவுறுத்தலின் பேரில், இளநிலை பொறியாளர்கள் சேகர், ஜெய்சங்கர், சுகாதார ஆய்வாளர் பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.